CONNEMARA PUBLIC LIBRARY
26 MAY 1955
MADRAS

பொள்ளாச்சி வாசி

ஆசிரியர் P.S.வேலுசாமி வியாழன் வெளியீடு.

போர் 1 பொள்ளாச்சி. 18—10—51. விலே அரையணு. 4-பக்கம். வெற்றி

ஸ்ரீ வி. கே. பி. கவுண்டரும், ஸ்ரீ மகாலிங்கமும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ஹரிஜன தொகுதிக்கு ஸ்ரீ பி. கே. திருமூர்த்தி.

சென்னேயில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் தேர்தல்போர்டார் பொள்ளாச்சித்தாலூக்காவிற்கு கிணத்துக்கடவுத் தொகுதிக்கு ஸ்ரீ வி. கே. பழனிச்சாமிக் கவுண்டரையும் டவுன் தொகுதிக்கு ஸ்ரீ மகாலிங்கத்தையும் ஹரிஜன தொகுதிக்கு ஸ்ரீ பி. கே. திருமூர்த்தியையும் சிபார்சு செய்துள்ளதாகத் தெரிகிறது. மற்றும் கோவை ஜில்லாவிற்கு சில தொகுதிகளுக்கும் தங்களின் சிபார்சைத் தெரிவித்துள்ளனர். அதிகாரபூர்வமான ஜாபிதா டில்லியிலிருந்து வெளியாகும். உடுமலேப்பேட்டைக்கு ஸ்ரீ ஆர். வி. ஜி. நாயுடு, தாராபுரம் ப, து வடிவேல், காங்கயம் ஸ்ரீ கே என். பழனிசாமிக்கவுண்டர் பல்லடம் பி எஸ் ரங்கசாமி மேட்டுப்பாளேயம் ஸ்ரீ பி. வி. ஏ. அஸாத், பவானி பி. கே. நல்லசாமி, கோபி ஸ்ரீ பி. எஸ். நல்லாக்கவுண்டர், நம்பியூர் ஸ்ரீ கரித் திருமகவுடர், தொண்டாமுத்தூர் ஸ்ரீ வி. சி பழனிசாமிக்கவுண்டர், கோவை ரூரல் ஸ்ரீ ஆர். குப்புசாமி, கொடுமுடி ஸ்ரீ கே எம். மகுடபதி (முடிவாகவில்லே) ஈரோடு தெய்வசிகாமணி கவுண்டர், மொடக்குறிச்சி சி. சுப்ரமணியம் (ஊர்ஜிதமாகவில்லே) கோவைடவுன் வெங்கடசாமி நாயுடு [ஊர்ஜிதமாகவில்லே) பார்லிமெண்டுக்கு ஸ்ரீமான்கள் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், டி. எஸ். அவனுசிலிங்கம் செட்டியார், தாமோதரன், கே. பெரியசாமிக்கவுண்டர் முதலியவர்கள் சிபார்சு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. கோபி ஹரிஜன தொகுதி மாணிக்கம் பல்லடம் ஹரிஜன தொகுதி ஆறுமுகம் மேலேகாட்டியுள்ள ஜாபிதா அதிகாரபூர்வமானதல்ல. இரண்டொரு மாறுதல்களும் ஏற்படலாம.

சுடச்சுட!?

○ ஐக்கிய முன்னணி கட்சியின் முக்கியகுறிக்கோள், இந்தத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியை அடியோடு வீழச்சியடையச்செய்து நாட்டைப் பக்குவப்படுத்துவதற்கு வேண்டிய முறைகளே கையாளுவதும், மக்களுக்குவேண்டிய உடனடியான பிரச்சனேகளே தீர்ப்பதற்கு பாடுபடுவதும் ஆகும்.

(மோகன் குமாரமங்கலம்.)

சிங்கத்தைப்பார்த்து சிறுநரிகள் எங்களுக்கு நாட்டாண்மையைக் கொடுத்துவிடு இல்லேயென்றுல் நாம் ஐக்கியப்பட்டு உன்னே ஒழித்துவிடுவோம் என்று ஊளேயிடுவது போலத்தான் இந்த ஐக்கியமுன்னணியும்! நரிக்கு நாட்டாண்மை கொடுத்தால் தடவைக்கு பத்தாடு கேட்குமாம்! இவர்களே நம்பி (மண்குதிரை) நம்பி யார் ஏமாறப்போகிறுர்கள் என்று அடித்தாற்போல் கூறுகிறுர் ஐக்கியமுன்னணி முன்னிலேயில் நின்று இன்சால்வென்ட் வாங்கிய ஆசாமி ஒருவர்.

○ பதுக்கிய பணத்தை பதுக்கியவர்களே வெளியிட்டதன் மூலம் இதுவரை 19-59 கோடி ரூபாய் வெளிப்பட்டிருக்கிறது இதற்கு வருமானவரி 5-கோடி ரூபாய் ஆகும்.

(மகாவீர்தியர்

ஐயோ பாவம்! இந்தப்பணம் ச
திக்க என்னென்ன பதுக்கல் வேலே
செய்திருப்பார்களோ என்று அவர்
மீது பரிதாபப்படுகிறுர் ஒரு பழய ப
கல் புரோக்கர்.

○ பண வீக்கத்தை தடுக்க ரூ
பின் மதிப்பை உயர்த்தவேண்டும்.
(ஜான்மத்தா

இவர் நிதிமந்திரியாக இருக்கும்
துஏன் அவர் உயர்த்த முடியவில்லே
ன்று கேட்கிறுர். புதிதாக வரப்போ
எம். பி மெம்பர் ஒருவர்.

○ வரும் பொதுத்தேர்தலுக்கு முஸ்
லீக் அபேக்ஷகர்களே நிறுத்துவது என
முடிவுசெய்திருப்பதும், காங்கிரஸை
ரிக்கவேண்டாம் என்று முஸ்லீம்க
கேட்டிருப்பதும இந்திய முஸ்லீம்களு
முஸ்லீம் லீக் இழைத்த ஒரு மாபெரும்
ருகும்,

[அப்துல் அமீத்கான்.]

பேனு எப்படி லீக்கானுல் கெட்டு
யோகமற்றுப்போய்விடுமோ அதுபோல இ
லீகினுல் முஸ்லீம் மக்களுக்கு ஒரு நன்
மேற்படாது என்பதையாவது இனி
முஸ்லீம்கள் உணரட்டும்! என்று ஜெய் ஹ
அல்லாஹு அக்பர் போடுகிறுர் முஸ்
லீக்கிலிருந்து வெளிவந்த மாஜிலீகர் ஒரு

கே: ஐயா உங்கள்வாசியில் காங்கிரஸி
வோட் செய்யுங்கள் என்று எழுதியிருக்
களே காங்கிரஸில் யாரை நிறுத்திஞலும்
ரிப்பீர்களா?

(வாசு.)

ப: காங்கிரஸிற்கு வோட்செய்ய வே
யது மக்கள் கடமை, நாம் நேர்மையும் தி
யும் உள்ளவர்களே த்தான் ஆதரிப்போம்.

செல்வாக்கு மிகுந்த தமிழ் வாரப் பத்திரிகை.

பொள்ளாச்சி வாசி

பொள்ளாச்சி 18—10—51. வியாழன்.

...ராட்டுகிறேம்!

பொள்ளாச்சித் தாலூக்காவிற்கு சட் ...பைக்கு காங்கிரஸ் அபேக்ஷகர்களாக, ...மான்கள் வி. கே. பழனிசாமிக்கவுண் ...நம், மகாலிங்கமும், ஹரிஜன தொகு ...க்கு பி கே. திருமூர்த்தியும் தேர்ந்தெ ...க்கப்பட்டிருப்பது கண்டு நாம்பெரிதும் ...தோஷப்படுகிறேம். தேர்ந்தெடுக்கப் ...வதற்கு முன்னல் ஒவ்வொருவரும், ...வர்தான் வேண்டும், இவர்தான் வேண் ... என்று அவரவர் அபிப்பிராயங்களைத் ...ாளமாய்ச் சொல்லிவந்தோம் நம் ...லூக்காவைப் பொறுத்தவரை ஸ்ரீ வி ... பி. கவுண்டரா? ஸ்ரீ மகாலிங்கமா? ...பது பெரிய பிரச்சனையாய் இருந்தது ...ரது அபிப்பிராயம் இருவரும் வேண் ... என்பதே. அதன்படியே இப்போது ...நவரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ...தில் வெற்றியோ தோல்வியோ யாருக் ...ம் கிடையாது. இருவரும் காங்கிரஸ் ...ரார்கள். இருவரும் காங்கிரஸிற்கு மனு ...செய்தனர். இருவரும் தேர்ந்தெடுக்கப் ...டுள்ளனர். இதில் ஒருவருக்கு வெற்றி ...நவருக்கு தோல்வி என்று பேசுவது ...டிமுட்டாள்தனம். உண்மையில் இருவ ...ருக்கும் வெற்றிதான். தோல்வி என்பது ...வெருரு நபருக்கு. அதுபற்றி நமக்குக் ...வலை இல்லை. ஒரு சிலர் ஸ்ரீ வி. கே. பி. ...டவே கூடாது. அவரை ஒழித்துக்கட் ...வேண்டும் அதற்கு இதுதான் சமயம் ...ன்று கிளம்பினர். சொந்த விருப்புவெ ...றுப்புகளைக்காட்ட இந்த சந்தர்ப்பத்தை ...ன்படுத்திக்கொண்டு கிளம்பினர். அத ... ஸ்ரீ மகாலிங்கத்தின் ஆதரவையும் ...யோகப்படுத்திக் கொள்ளலாம் என்று ...த்தனர்.

தோல்வி அவர்களுக்குத்தான், ஸ்ரீ மகாலிங்கம் கூடவே கூடாது என்றுயாரும் சொல்லவில்லை. எனவே இருவரும் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது குறித்து அநேகருக்கு மகிழ்ச்சிதான். சுயநலவாதிகளுக்கு ஒருக்கால் ஏமாற்றமாயிருக்கலாம் சென்றதை எல்லாம் மறந்துவிட்டு அனைவரும் ஒன்றுபட்டு காங்கிரஸ் வெற்றிக்காக உழைப்பதுதான் உண்மை தேசபக்தர்களின் கடமை. அதைச் செய்வார்களா? என்பதைப் பொறுத்துப் பார்ப்போம். டவுன்தொகுதியில் வெற்றிபெற ஸ்ரீ வி. கே. பி. யின் உதவி அவசியம், கிணத்துக்கடவு தொகுதிக்கு ஸ்ரீ மகாலிங்கத்தின் ஆதரவு அவசியம்எனவே இரண்டுபேரும் ஒன்றுபட்டு வேலைசெய்து காங்கிரஸ் வெற்றியை நிலைநாட்டி நம் தாலூக்கா காங்கிரஸ் கோட்டை என்பதைநிரூபிக்க முனைவார்களாக.

குருவி ஜோசியம்.

நமது குருவியைப்பற்றி பலர் பலவிதமான கதைகள் கட்ட ஆரம்பித்துள்ளனர். குருவி உடல் நலக்குறைவால் உளறிக்கொட்டுகிறது. விரைவில் உயிரை விட்டுவிடப்போகிறது அதை ஏன்? பொருட்படுத்த வேண்டுமென்கிறர், ஒரு துண்டு பிடிக்கு லாட்டரி அடித்துக்கொண்டிருந்து பதவிபெற்று, பணக்காரர்கள் தயவுபெற்று, பர்மிட்டுகள் பெற உதவிசெய்து அதனல் தனது நிலையை உயர்த்திக்கொண்டு பெரியமனிதர் வேடம்தாங்கி சதாவும் சிகரெட் பிடிக்கும் தேசபக்தர் கூறுவதாக குருவி ஜோசியம் சொல்லுகிறது.

குருவி உடல் நலக்குறைவோடு இருந்தபோதிலும், மனேவலிமையை இழக்கவில்லை. வம்பு தும்புகாரார்களுக்கும் வாயாடிகளுக்கும் காங்கிரஸின் பெயரைச்சொல்லி தேசபக்தர் வேடம் தாங்கி தங்கள் அந்தஸ்தை உயர்த்திக்கொண்டிருக்கும் திருக்கூட்டத்திற்கும் என்றும், எப்போதும் பயப்படாது. சமயம் நேர்ந்தால் அவர்கள் வண்டவாளத்தை தண்டவாளத்தில் ஏற்றவும் தயங்காது என்பதாகவும் குருவி ஜோசியம்சொல்லுகிறது. குருவியைபற்றி சொன்னவர்கள் சிலர் குருவிக்குமுன்னுடியே இறந்துவிட்டதை நேரில் பார்த்துவிட்டது. இப்போது அப்படி சொல்பவர்களுக்கு அந்த கதி ஏற்படக்கூடாது என்று வருந்துகிறது,

பொள்ளர்ச்சி தாலூக்காவிலிருந்து சட்டசபைக்குச்செல்ல ஸ்ரீ வி. கே, பி. கவுண்டரும், ஸ்ரீ மகாலிங்கமும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது குறித்து குருவி மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறது என்ற போதிலும் திரைமறைவில் ஏதேனும் சூழ்ச்சிகள் நடந்தால் குருவி ஜோசியம் கண்டிப்பாய் சொல்லுவதாகச் சொல்லியிருக்கிறது. கோவை பிரமுகர் கிணத்துக்கடவு பிர்க்காவை விட்டு9போய் வேறு தொகுதியில் நிற்கிறரே அங்கே மக்கள் ஆதரவு எப்படி இருக்கிறது, அவர் வெற்றிபெறுவாரா? என்று குருவியை பலர் ஜோசியம் கேட்கின்றனர். அவர் நிற்கப்போகும்தொகுதியில் உள்ள மக்கள் எந்த நிலையில்என்னமனேபாவத்தில் இருக்கின்றனர் என்பதைக் குருவி விரைவில் ஜோசியம் சொல்லும். எப்படியும் கோவை பிரமுகர் மந்திரியாய் வரவேண்டும் அப்போது தங்களுக்குப் பல காரியங்கள் சாதித்துக்கொள்ளமுடியும் என்று நினைக்கும்பெரியவர்கள் ஏராளமான தொகையை தாராளமாய் செலவு செய்து அவர் வெற்றிக்காக பாடுபடாமலாபோய் விடுவார்களென்று குருவிசொல்லுகிறது சென்ற 1937-ம் வருஷத்தில் நடந்த தேர்தலில் ஸ்ரீ ஜி. டி நாயுடு காங்கிரஸிற்கு போட்டியிட்டபோது பலவோட்டர்கள் அவர்பஸ்ஸிலேயே வந்து அவர் சாப்பாடு காபி முதலியவைகளை சாப்பிட்டுவிட்டு வோட் மட்டும் மஞ்சள் பெட்டிக்கு போட்டுச்சென்றனர். இந்தத்தேர்தலில் சிலஇடங்களில் காங்கிரஸ் அபேக்ஷகர்களுக்கு அந்த கதி வரும் ஜாக்கிரதை. பணம் மட்டும் போதாது மக்களின் அன்பும் தேவை - ஆகவே உடனடியாய் நேரிடையாய் மக்களின் தொடர்புகொள்ளுங்கள். அப்போதுதான் காங்கிரஸ் வெற்றிபெறும் என்று காங்கிரஸ் அபேக்ஷகர்களுக்கு குருவி ஜோசியம் சொல்லுகிறது

கோவை ஜில்லாவில் ஒரு இடத்தில் ஒருவர் ஒரு பெண்ணிடம் தவருகநடந்துகொண்டதற்காக பட்டப்பகலில் பலபேர் முன்னிலையில் பஸ் ஸ்டேண்டில் செறுப்படி பட்டும் ஊர் சிறித்தும் அது விபரம் தலைவர்களுக்குத் தெரிந்து அவரைக் காங்கிரஸ் அபேக்ஷகராக நிறுத்துவதாகவும் அதைக் கண்டிக்கும்படியும் குருவிக்கு ஓர் புகார்மனு வந்துள்ளது அதுபற்றி குருவிக்கு ஏற்கெனவே எல்லாவிபரமும் தெரியும். அவரை காங்கிரஸ் அபேக்ஷகராக நிறுத்தினல் கண்டிப்பாய் தோல்வி அடைவார் என்று குருவி இன்றேஜோசியம் சொல்லுகிறது. அவரை நிறுத்த மாட்டார்களென்றும் குருவி நம்புகிறது, பல விஷயங்கள் அடுத்த வாரம் குருவி சொல்லும்.

பொள்ளாச்சி பஜார்!

சுந்திரம் ஜுவல்லரி மார்ட் &
A, C. C. நீலகிரி பிராண்டு
சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்,
S. நாகமாணிக்கம்செட்டியார் & பிரதர்,
போ. நெ. 85.
கடை வீதி & மார்க்கட் வீதி

மாடர்ன் கபே.
போர்டிங் & லாட்ஜிங்,
கடை வீதி & கச்சேரி வீதி.

K. M. D. C. & A. R. P. மற்றும் பல கூப்பன்கள் பூர்த்திசெய்து கொடுப்பதற்கு நம்பகமான இடம்.
R. M. D. C. Crosswords.
S. S. சுந்திரம், கலக்டர் நெ. 3335.
நாராயணா டாக்கீஸ் அருகில்.

இளைஞர் காங்கிரஸ்.

14–ம் தேதி ஞாயிறு மாலை 6–மணிக்கு நகர இளைஞர் காங்கிரஸின் சொற்பொழிவுப்பயிற்சிக் கூட்டம் அதன் காரியாலயத்தில் ஸ்ரீ பி கே. வெங்கடாசலம் எம். ஏ தலைமையில்நடைபெற்றது. அதுசமயம் தேர்தலும் வருங்காலமும் என்னும் பொருள்பற்றி இளைஞர்கள் பொ. நா. வாசுதேவன், சு. பழனிசாமி, கு. வெள்ளிங்கிரி, க. சுப்பையன், இளங்கதிர், க. சந்தரசேகரன், என். கே. வெங்கடாசலம், அ ராமசாமி அ. முத்துசாமி காரியதரிசி அ. பாசித் ஆகியோர் பேசினார்கள். ஜே. எஸ். கிருஷ்ணராவ், பேசிப் பழகுவது எப்படி என்பதை இளைஞர்களுக்கு எடுத்துக்கூறினர்.

கோவை ஜில்லா இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ மகாலிங்கம் அவர்கள் தேர்தல் எப்படி இருக்கவேண்டும், தேர்தலில் மக்கள் கடமை என்ன? பிரதிநிதி எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும் மேல்நாடுகளில் எப்படி தேர்தல் நடைபெறுகிறது. நம் நாட்டில் ஜனநாயகம்எப்படி நடைபெறுகிறது. ரஷியாவில்எப்படி சர்வாதிகாரம் நடைபெறுகிறது என்பவைகளை விளக்கிப்பேசி இளைஞர்களுக்கு சொற்பொழிவுப் பயிற்சி அளித்தார். தலைவர் முடிவுரையில் மற்றகட்சிகள் தவராக பிரச்சாரம் செய்வதாலும் அதைக்கண்டு இளைஞர்கள் ஆத்திரப்படாமல் தக்கமுறையில் அவர்களை மக்கள் முன் அம்பலப்படுத்தவேண்டுமென்று பேசினர் காரியதரிசி நன்றிகூற கூட்டம் இரவு 9-மணிக்கு முடிவுற்றது.

முத்தமிழ் வளர்ச்சிக் கழகக்கூட்டம்.

வடுகபாளையத்தில் ஷை கழகத்தின் கமிட்டிக்கூட்டம் 8–ம் தேதி ஸ்ரீ வி. கே. பழனிசாமிக்கவுண்டர் தலைமையில் நடைபெற்றது அறிஞர் வ. ரா நடிகர் பி யு. சின்னப்பா, முத்துசாமி உடையார் காலமானதற்கு அனுதாபம் தெறிவிக்கப்பட்டது. மலேயா தமிழன் பெரியண்ணனை தூக்கிலிடுவதைத்தடுக்க இந்திய அரசாங்கத்தை கேட்டுக் கொள்ளப்பட்டது. வடுகபாளையம் ரயில்வே லைன் பாதையில் வண்டிப்பாதை பொதுமக்கள் உபயோகத்திற்கு தேவைப்படுவதால் ஏற்படுத்த தென்னிந்தியா ரயில்வே நிர்வாகிகளை கேட்டுக்கொட்டுக்கொண்டும் மற்றும் சில தீர்மானங்களுடன் கூட்டம் முடிவுற்றது.

28—9—51 ல் இந்நகர வள்ளுவர் நாடகமன்றக் கூட்டம் ஸ்ரீ அசோக மேத்தா தலைமையில் நடைபெற்றது. நடிகர் பி. யு. சின்னப்பா மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. காரியதரிசி ஸ்ரீ ப மாணிக்கவாசகம் பேசினர்.

13-ம் தேதி புதன் மாலை டவுன் போலீஸ்டேஷனில் ஆயுதபூசை, சரஸ்வதிபூசை வாண வேடிக்கைகளுடன் வெகு சிறப்பாகசெய்யப்பட்டது. இதில் காங்கிரஸ்ஊழியர்கள், பொதுமக்கள், அதிகாரிகள், பிரமுகர்கள் ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

சந்திரன் காலேஜ் ஸ்கூல்.
298, இடையர் வீதி, கோயமுத்தூர்.

ஒரு வருஷத்தில் 14-வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண்கள் E. S. L. C க்கும் 20-வயதிற்கு மேற்பட்டவர்கள் மெட்ரிகுலேஷனுக்கும் 9-ம் வகுப்புவரை ஹைஸ்கூல்களிலும் சேரலாம். S. S. L. C இண்டர் வகுப்புகள் உண்டு. ஹாஸ்டல் உண்டு.

தலைவர்:– **S. R. Chandran.**

நேயர் தபால்;

(போக்கு வரத்துக்கு ஆபத்து.)

நமது நகர ஆண்கள் உயர்நிலைப்பள்ள
க்கு மேற்காகவும் தெற்காகவும் இரண்
போலீஸ் மேடைகள் இருக்கின்றன. ப
ளிக்கு மேற்காக இருக்கும்இடத்தில்தா
போலீஸ் சிற்சில சமயங்களில் யாராவ
விஜயம்செய்தால் அந்த மேடையில் நி
கின்றனர் மற்றைய தினங்களில் இல்
போக்குவரத்துக்கு ஆபத்தில்லாமல் ப
றைய தினங்களிலும் நிற்பார்களேயா
பொதுஜனங்களுக்கு மிகவும் உப
மாக இருக்கும்,

(வி. சு. மணி)

நகர ஒலிபரப்புநிலையம்.

19...10...51 வெள்ளி மாலை 7 தே
லும் பத்திரிகைகளின் கடமையும். திரு.
எஸ். வேலுசாமி, 20 சனி 7 பற்களை பா
காக்கும் முறை. டாக்டர் கே. ஒ. சந்தி
21 ஞாயிறு 7 வாரந்திர செய்திச்சுருக்
திரு: பி. கே. சேதுராமசாமிக்கவுண்டர்,
திங்கள் 6-30 திருக்குறள் விளக்கம்,
சிவகுருநாதபிள்ளை, 23 செவ்வாய் 7
சாரம், திரு. இராமநாதன் செட்டியார்,
புதன் 5-30 பாட்டு. 25 வியாழன் 7
யோர் கல்வி. திரு. பால்ஜேசுதாசன்.

எதிர்பாருங்கள்!

கோணிக்கதர் அணிந்து குரங்குக்
லாய் போட்டு நாணமே இல்லாது நம்
நாடி வோட் கேட்டும் காங்கிரஸ்காரர்க
டம் இதைக்கேளுங்கள் .... என்
கட்டுரையை நமது வாசியில் எதிர்பா
கள்.

பொள்ளாச்சியில் வீடுவிற்பனை.

வெங்கட்டரமணய்யர் வீதியில் 16,
58 நெம்பர் வீடுகள் சகல வசதிகளுட
கூடியது விற்கப்படும். தேவை உள்ள
கள் நேரில் பார்த்து பேசி முடித்
கொள்ளலாம். பகிரங்க விற்பனை தே
விவரங்களை நோட்டீஸில் காண்க.

M. பாலசுப்ரமணியம்,
பொள்ளாச்சி.

கவுண்டர் & கம்பெனி
லிமிடெட்,
கூட்ஷெட் ரோடு, பொள்ளாச்சி.

போர்டு; செவர்லெட்

இதர மோட்டார்களுக்கு அவசியமான உறுப்புகள்,
டயர், டியூப்புகள், பேட்டரி வகைகள்
விற்பனை செய்யப்படும்.

பஸ், லாரி பாடிகள் போட்டுக்கொடுப்பதுடன்,
எல்லாவிதமான மோட்டார் ரிப்பேர்களும்
செய்து கொடுக்கப்படும்

தபால் பெட்டி நெ. 25.

N.B :— ரெடிமேடு பவுன் நகைகள் உத்திர வாதத்துடன் கிடைக்கும்.
Prop: B. பாலமாணிக்கம் செட்டியார் & பிரதர்ஸ்.

கேள்வி—பதில்.

கே: சினிமா நடிகர்களுக்கு பட்டம் கொடுத்தால் அவர்கள் அதிக நாள் உயிருடன் இருப்பதில்லை ஏன்?

(கே. ஆர். சாரங்கபாணி)

ப: பட்டம் ஒரு வேளை மரண அழைப்பாக இருக்கலாம்.

கே: மனைவிக்கு கட்டப்படும் மாங்கல்யத்தைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

(ஏ. கே. பி. கந்தசாமி)

ப: கணவனால் அளிக்கப்படும் பாஸ்போர்டு தான்போலும்!

கே: சிந்தனையை விலைக்கு வாங்க முடியுமா?

(கே. எஸ். கே. சாமி)

ப: கொள்கை இல்லாதவர்களிடம் வாங்கலாம்!

கே: காங்கிரஸிலிருந்து பிரிந்து பிற கட்சியில் சேர்ந்து பின்னர் அதிலிருந்து விலகி காங்கிரஸில் சேருகிறார்களாமே அது உண்மையா?

(ரா. மயில்சாமி)

ப; உண்மை தான்!

கே; மனைவியை எதற்கு உபமானம் கூறலாம்?

(டி. சீனிவாசன்)

ப: ஒரு கேஷ்பாக்ஸ் (பணப்பெட்டி)க்கு கூறலாம்.

கே: ஈ. வெ. ரா. வுக்கு குழந்தைக்கு உண்டா?

(எல் மணியன்)

ப — கல்யாணம் செய்தும் பிரம்மசாரிக்கு எங்காவது குழந்தைகள் இருக்குமா?

கே — விதி என்றால் என்ன?

(எஸ். எம். விசாலாட்சி)

ப — கையாலாகாதவர்களின் கற்பனை

கே — எலும்புக்கூடு சிவஞான கிராமணியார், காங்கிரஸ் கொள்கைகளை ஆதரிக்கிறாரா? அதன்படி அவர் நடக்கிறாரா?

(வி. என். ஜயமணி)

ப — எலும்புக்கூடு முறுக்கு மீசை கிராமணி சொல்லிக்காட்டுவதை செய்து காட்டுகிறார்.

கே — என்: என். கண்ணப்பா நம் ஊருக்கு வந்ததாகக் கேள்விப்பட்டேன், ஆனால் நான் பார்க்கவில்லை, அவருக்கு சில நாளில் இவ்வூரில் திருமணம் நடக்கிறதாம் அது உண்மையா? பொய்யா?

(வி. கே. கே. மணி)

ப — கண்ணப்பாவும் நம்மைப்போன்ற மனிதர் தானே! ஐயோ பாவம்! உமது நிலைக்கு நான் பரிதாபப்படுகிறேன், கல்யாணத்திற்கும், உமக்கும் என்ன சம்மந்தம்!

கே — 12-ம் தேதி நடந்த கம்யூனிஸ்ட் கூட்டத்தில் மோகன் பேசுகையில் பிரிட்டன், அமெரிக்கா இவைகளின் மூலதனத்தையும் வியாபாரத்தையும் நிறுத்திவிட்டு காப்பி தேயிலை இவைகளை ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் கொடுத்து உணவு வாங்கலாம் என்றாரே இதன்மர்மமென்ன, இது தான் அந்நிய நாட்டின் பிடியிலிருந்துவிடுபடுவதா?

(அ: முத்துசாமி)

ப — கம்யூனிஸ்ட்களின் ஆதிக்கத்திற்கு அடிமைப்படுத்த இவர் ஒரு குறுக்கு வழியை காண்பிக்கிறார்.

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi